# ஆஸி. மனித உரிமைகள் குழு வடக்கு-கிழக்கு செல்லத் தடை?

[கொழும்பு]

வடக்கு- கிழக்கு பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள இலங்கை வந்த 'அவுஸ்திரேலிய மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் இப்பகுதிக்கு செல்ல இலங்கை அரசு அனுமதி மறுத்துள்ளதாக தெரிய வருகிறது.

கடந்த 13ம் திகதி இலங்கை வந்த மேற்படி அமைப்பின் தலைவர் திரு. எஸ். எல். ரெய்ட் வடக்கு கிழக்குப் பகு

[4ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU

'NATIONAL' TAMIL DAILY'

மலர் 33 | வைகாசி 13 | துல்ஹஃதா 12 | இதழ் 105

யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 27-05-1991

## 30 நாளில் இனப்பிரச்னையை தீர்ப்பதற்கு ஆலோசனை

[கொழும்பு]

இலங்கை இனப் பிரச்னைக்கு முப்பது நாட்களில் இணக்கமான தீர்வொன்றைக் காண்பதற்கு பாராளுமன்ற அரசியல் கட்சிகளின் தெரிவுக் குழுவை நியமிக்குமாறு மக்கள் ஐக்கிய முன்னணி [எம். ஈ. பி] அரசாங்கத்திடம் கோரிக்கைவிடுத்துள்ளது.

பாராளுமன்றம் அடுத்த தடவை கூடும்போது இந்த யோசனை ஜனாதிபதி ஆர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தெற்கில் மனித உரிமை மீறல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீர்க் கதைகள்

[லண்டன்]

இலங்கையின் தென்பகுதியில் இடம்பெற்றுவரும் மனித உரிமைமீறல் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் ஒரு சிலரது பேட்டிகள் நேற்றைய பி. பி. ஸியில் ஒலிபரப்பானது.

பிள்ளைகளை இழந்த தாய்மார்களும், கணவர்மாரை இழந்த பெண்களும், சகோதரர்களை இழந்த சகோதரிகளும் இந்தப் பேட்டியின்போது துக்கம் தாழாமல் தேம்பித் தேம்பி அழுது தமது பிள்ளைகளுக்கும், கணவன்மாருக்கும், சகோதரர்களுக்கும் ஏற்பட்ட பரிதாப நிலைமைகளை எடுத்து விளக்கினர்கள்.

வீட்டிலிருந்து வேலைக்குப் புறப்பட்டவர்களை ஆயுதப் படையினர் திடீரென்று வாகனங்களில் ஏற்றிச் சென்றதாகவும் அவர்களுக்கு அதன்பின்பு என்ன நடந்தது என்பது பற்றி தெரியவில்லை

(4-ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவிலுள்ள $2\frac{1}{2}$ லட்சம் இல. தமிழர் மத்தியில் பெரும் பீதி

## வாழப்பாடி ராமமூர்த்தி, ஜெயலலிதா கோரிக்கையின் விளைவு

(மணிலா)

**இந்தியாவில் தங்கியிருக்கும் சுமார் இரண்டரை லட்சம் இலங்கைத் தமிழ் அகதிகள் மத்தியி தற்போது ஒரு பீதி நிலவுவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.**

ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டதையடுத்து இலங்கைத் தமிழர்கள் அனைவரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவேண்டுமென தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும், அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவும் கோரிக்கை விடுத்ததையடுத்து இலங்கைத்தமிழ் அகதிகள் மத்தியில் பீதியும் ஒரு ஸ்திரமற்ற நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

இலங்கைத் தமிழ் அகதிகள் தாமாக முன்வந்து தமிழகத்தை விட்டு வெளியேறுவது அவர்களுக்கு நல்லது. அல்லது அவர்கள் எமது மக்களால் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று திரு. வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்திருக்கிறார்.

## மாதகல் கடலில் கடற்படை ரோந்து அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

மாதகல் கடற்பிரதேசத்தில் ஸ்ரீலங்கா கடற்படை விசைப் படகுகளின் ரோந்து, சில நாட்களாக அதிகரித்துக் காணப்படுகிறது.

இதேவேளை மாதகல்-சுழிபுரம் கடற்பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல், கடற்படையினரின் பீரங்கி பூட்டிய ஐந்து விசைப் படகுகள் நங்கூரமிட்ட நிலையில் தரித்து நின்றன.

(72)

## யாழ். மருத்துவபீட பரீட்சை கொழும்பிலும் நடைபெறும்

[கொழும்பு]

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இரண்டாம் எம். பி. பி. எஸ். பரீட்சை யாழ். பல்கலைக் கழகத்திற்கு வருகைதர முடியாத மாணவர்களுக்கு கொழும்பில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக் கழகத்தின் வேண்டுகோளின் பேரிலேயே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

[4ம் பக்கம் பார்க்க]

## 1,000 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

(கொழும்பு)

வெசாக் தினத்தை முன்னிட்டு ஆயிரம் சிறைக் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

(4ம் பக்கம் பார்க்க)

## கட்டுவனில் ஷெல் வீச்சு!

[யாழ்ப்பாணம்]

கட்டுவன் பகுதியிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் அதிகாலையிலிருந்து துப்பாக்கிப் பிரயோகமும் அதனைத் தொடர்ந்து 11 மணியிலிருந்து ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் விமானத் தாக்குதல்

[ஆனையிறவு]

ஆனையிறவு இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் காலை கடுமையான வான் தாக்குதல் நடைபெற்றது.

இத்தாக்குதல் சம்பவம், காலை 9-00 மணியிலிருந்து மாலை 3-00 மணி வரை இடம் பெற்றது.

3 ஹெலிகொப்டர்கள், 2 குண்டு வீச்சு விமானங்கள், ஒரு அவ்ரோ விமானம் ஆகியன இணைந்து மேற்கொண்ட இத்தாக்குதலினால் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

(பூ)

## காங்கிரஸ் செயற்குழு நாளை மறுதினம் கூடும்

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸின் செயற்குழு நாளை மறுதினம் புதன்கிழமை கூடவிருக்கிறது.

கட்சித்தலைவர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதையடுத்து ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கும் விதமாகவே செயற்குழு கூட விருப்பதாக காங்கிரஸ் பேச்சாளர் திரு. பிரணப் முகர்ஜி புதுடில்லியில் தெரிவித்தார்.

கட்சியின் தலைமைப் பதவி சம்பந்தமான சிக்கலான விட

[4ம் பக்கம் பார்க்க]

## இறப்பதற்கு முன் ராஜீவ் ஈழத் தமிழர் பற்றி பேச்சு

(சென்னை)

ராஜீவ் காந்தி இறப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன், இலங்கைத் தமிழர்கள் பிரச்சனை பற்றி இரண்டு கூட்டங்

[4ம் பக்கம் பார்க்க]

## காங்கிரஸ் தலைமைப் பதவியை ஏற்க சோனியா மீண்டும் மறுப்பு!

(புதுடில்லி)

இந்திராகாங்கிரஸ்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்பதற்கு திருமதி சோனியா காந்தி கண்டிப்பாக மறுத்து விட்டார்.

கட்சியின் மூத்த தலைவர்கள் அவரிடம் சென்று தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்வது சம்பந்தமான முடிவை மீள்பரிசீலனை செய்யு

(4ம் பக்கம் பார்க்க)

## சுவீடனுக்கு முதலிடம்

(லண்டன்)

உலகில் மனித உரிமைகளை மிகச் சிறப்பான முறையில் பேணும் நாடுகளில் சுவீடன் முதலிடத்தைப் பெறுகிறது.

ஜெனீவாவில் மனிதஉரிமைகள் இயக்கம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# வரிவிளம்பரம்


### விற்பனைக்கு

சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலி மடத்தடி ஒழுங்கையில் வீட்டுடன் 2 பரப்புக் காணியும், 5 பரப்பு வயல் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு புத்தூர் சந்தி, விநாயகர் ஸ்ரோர்ஸ் அல்லது இருபாலைச்சந்தி ராஜா ஸ்ரோர்ஸ். (சி-4767]

### நீமியா உரம்

பூச்சிகளால் நோயினுல் பாதிப்புறும் நெற்பயிரைக் காப்பாற்ற 'நீமியா' உரத்தை நீரில் ஊறவைத்து வடிகட்டித் தெளியுங்கள். சைமேற் பலன். மில்க்வைற். (சி–1333)

### நகைச்சுவை

தமிழில் நாடகங்களுக்கு மட்டுமல்ல, நகைச்சுவைக்கும் பஞ்சம் இரண்டையும் ஒருங்கே தருவன அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 25/-, முதலாம்பிள்ளை 30/- நூல்கள். [கி 4719)

### ஜோதிடம்

சிங்கராசி அரசுத்தலைவர்கள் ராஜீவ் காந்தியினதும், ஜெயலலிதாவினதும் ஜாதகங்களின் பெலவீனங்களாலும், வியாழ சுகமின்மையாலும் நாடாளும் யோகமில்லை. ஜெயலலிதா முதல்வராகும் பதவியையும் இழப்பார் எனவும் எமது ஜோதிட சஞ்சிகைகளில் முன்கூட்டியே வெளியிடப்பட்டுள்ளன. ஜோதிட நூல்களுக்கும், கணிப்புகளுக்கும்: Prof. சத்தியதாஸன், ஞானம்ஸ், சித்தன்கேணி. [சி 4778]


## நிதி ஒதுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் சமூக சேவைகள் திணைக்களத்தின் இவ்வாண்டு செயற்பாட்டிற்கு 2 கோடி 80 லட்சம் ரூபா வடக்கு–கிழக்கு மாகாணசபை புனர்வாழ்வுபுனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சினுல் ஒதுக்கப்பட்டுள்ளது. (153)

## பயிற்சி வகுப்பு

(காங்கேசன்துறை)

கிராமரீதியில் சுகாதார செயல்முறைகளை அறிமுகப்படுத்துவதற்காக கிராமங்கள் தோறும் தொண்டர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுவருகிறது. [86]

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இம்மாதம் 30ந் திகதி காலை 10 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராம சேவையாளர்களையும் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடாத்தவிருக்கிறுர். [153]

## புதிய அரச அதிபர்

[பூநகரி]

பூநகரி புதிய உதவி அரசாங்க அதிபராக ஆர். ரவீந்திரன் கடந்த 16-ம் திகதி பதவி ஏற்றுள்ளார்.

பூநகரியில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய வீ. எஸ். கனகரத்தினம் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு இடமாற்றம் பெற்றுச்செல்கின்றுர். [23]

## நெற்செய்கை பாதிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையால் 45 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் தரிசு நிலங்களாக காணப்படுகின்றன. இதனுல் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. (154)

## மிளகாய் செய்கை பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு,' மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மிளகாய்ச் செய்கை குருமன்நோயினுல் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனுல் அதிகமான மிளகாய்த் தோட்டங்கள் கைவிடப்பட்ட நிலையிலுள்ளன. (72)

## மாணவர்களின் முத்திரை

(மானிப்பாய்)

மானிப்பாய் பகுதி பாடசாலைகளில் பெப்ரவரி மாதத்திற்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகள் வழங்கப்படடுள்ளது.

இதேவேளை இம்முத்திரைக்குரிய பொருட்கள் இங்குள்ள ப. நோ. கூ. சங்ககிளைகளுக்கு வந்துசேரவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது. (71)

## தற்கொலை

[புங்குடுதீவு[

வியாபாரம் செய்வதற்காக மனைவியிடம் பத்தாயிரம் ரூபாவை கேட்டு அவர்கொடுக்கத் தவறியதனுல் மனமுடைந்த குடும்பஸ்தரான ஆறு பிள்ளைகளின் தந்தை ஒருவர் நஞ்சருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

புங்குடுதீவைச் சேர்ந்த பி. புவனேந்திரன் (வயது 38) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார், ...வர்கள் விரட்ட [101]

# இராசி பலன்

**27-05-1991**

**திங்கட்கிழமை**

சதுர்த்தசி பி.ப 4. 06 வரை; விசாகம் பின் இரவு 10. 44 வரை, வைகாசிவிசாகம், இராகுகாலம் காலை 7. 22 முதல் 8.52 வரை: சுப நேரம் காலை 11. 52 முதல் பகல் 1. 22 வரை.

மேடம்:– தொழில் அலைச்சல், அதிகயோசனை, குடும்ப பிரிவு.

இடபம்:- கடமையுணர்வு, பொருளாதார பலம், குடும்ப மகிழ்ச்சி.

மிதுனம்:- அந்நியர் உதவி மனமாற்றம், பணவரவு, காரியசித்தி.

கடகம்:- விபரீத எண்ணம் தொழில் பிணக்கு, வாய்த் தகராறு.

சிங்கம்:- கருத்து முரண்பாடு பணியாள் தொல்லை, அவமதிப்பு

கன்னி:– விருந்தினர்வருகை சுபகாரிய செலவு, பயணம், தானதர்மம்.

துலாம்;– கடன்சுமை, பயணஅலைச்சல், தொழில் பாதிப்பு, வெறுப்பு.

விருச்சிகம்:- நண்பர்வருகை தெய்வதரிசனம், தொழில் பாராட்டு.

தனுசு:- தொழில் நஷ்டம், புத்திரர் வெறுப்பு, வாய்த் தர்க்கம்

மகரம்:- மனதில் உற்சாகம், மகளிர் உதவி, குடும்ப உல்லாசம்.

கும்பம்:- ஏமாற்றம், வருவாய் பாதிப்பு, அகால போஜனம், குளப்பம்.

மீனம்:–மனப்போராட்டம், தப்பபிப்பிராயம், கடினமான பணி.

- ஜோஸ்யர்

# கோப்பாய் உ.அ.அ. பிரிவில் விளையாட்டு பயிற்சி முகாம்

(மானிப்பாய்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கழகங்களுக்கு விளையாட்டுப் பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதற்கான முயற்சியில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் எஸ். முருகேசம்பிள்ளையும் கோப்பாய் விளையாட்டு அதிகாரி வீ. வைரமுத்துவும் ஈடுபட்டுள்ளனர்.

ஜூன் 1ந் திகதி முதல் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இப்பயிற்சி வகுப்பிற்கான பயிற்சிகளை மெய்வல்லுனர் பயிற்சியாளர் கே. கே. விமலருசன் அளிப்பார். (71)

# சுகாதார தரிசிப்பாளர் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

சுகாதார தரிசிப்பாளர் பயிற்சி நெறி ஜூலை மாதம் 15ம் திகதி இணுவிலில் இயங்கும் பிராந்திய சுகாதார பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

40 பயிற்சியாளர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு 3 மாதப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

வவுனியா, யாழ். பிராந்தியங்களிலுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிருவாகப் பிரிவுகளிலுள்ள பொது சுகாதார பரிசோதகர்கள் பற்ருக்குறையை நீக்குமுகமாக இந்த சுகாதார தரிசிப்பாளர்கள் நியமிக்கப்படவிருக்கிறுர்கள். (153)

# 11 சுகாதார வைத்திய அதிகாரிகள் நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிர்வாக பிரிவின் கீழ் புதிதாக பதினெரு சுகாதார வைத்திய அதிகாரிகளை சுகாதார அமைச்சு நியமித்துள்ளது

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் வருமாறு; சாவகச்சேரி: டாக்டர் ஜி. பி. பிராங்ளின், கரவெட்டி: டாக்டர் செல்வி யூ. இந்திரராஜா, பளை: டாக்டர் வி. நடராசா, வேலணை டாக்டர் செல்வி ஸ்ரீரஞ்சனி, சங்கானை: டாக்டர் பி. நந்தகுமார், உடுவில்- டாக்டர் வி ஜெயபாலரத்தினம், நல்லூர் டாக்டர் எம். ஏ. அருளாநந்தன் பருத்தித்துறை டாக்டர் செல்வி எஸ். நாகலிங்கம், ஊர்காவற்றுறை: டாக்டர் செல்வி கே. செல்லையா, கிளிநொச்சி, டாக்டர் வி. ஞானுனந்தம், யாழ்ப்பாண மாநகர சபை டாக்டர் வி. ஜெகதீசன். [153]

# இணக்கமன்று இணைத்துவைத்த இளம் குடும்பத்தினர்!

[சித்தன்கேணி]

நரன்கு வருடங்களாக பிரிந்து வாழ்ந்த இளம் குடும்பத்தினரை வட்டுக்கோட்டை இணக்கமன்றத்தினர் ஒன்று சேர்த்து வைத்தனர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளம் குடும்பம் ஒன்று கடந்த நான்கு வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வந்தனர். இந்த இளம் குடும்பத்தினரை ஒன்றுசேர்த்து வைத்ததுடன் மதுபானம் அருந்தக்கூடாதென சம்பந்தப்பட்ட இளம் குடும்பஸ்தருக்குப் புத்திமதியும் கூறப்பட்டுள்ளது. [137]

# ஜூன் 1-ல் வெளியாகும் இளையோருக்கான இதழ்

(யாழ்ப்பாணம்)

''சாளரம்'' என்னும் புதிய சஞ்சிகை ஒன்று அடுத்த மாதம் 1-ம் திகதி தொடக்கம் வெளிவரவுள்ளது.

இளையோருக்சான இதழ் என்னும் மகுடத்துடன் வெளிவரும் சாளரம் ஈழத்தமிழ்மக்களின் அரசியல், பொருளாதாரம், கலாசாரம் போன்ற துறைகளை முன்னேற்றப் பாடுபடும் என்று இச்சஞ்சிகை பற்றிய அறிமுகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

யாழ். பொது நூலகம் ஸ்ரீ லங்கா பொலிசாரினுல் தீக்கிரையாக்கப்பட்ட பத்தாவது ஆண்டு நினைவு நாளில் சாளரம் வெளிவரவிருப்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## உப உணவு உற்பத்தி

(சொழும்புத்துறை)

தொல்புரம் மத்திய சன சமூக நிலையம், வாசிகசாலை, இந்து இளைஞர் மன்றம் ஆகியவற்றின் அங்கத்தினர் ள் கூட்டாகச் சேர்ந்து நிலையக்காணி 6 பரப்பில் சிரமதானப்பணி மூலம் உப உணவுச் சிறுதானியப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர், (154)

## வருடாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை காந்திஜி சனசமூக நிலைய கிராம முன்னேற்றச் சங்க வருடாந்தக் கூட்டம் இன்று காலை வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலய மண்டபத்தில் வலிகாமம் மேற்கு உ. அ. அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கால் நடை மருத்துவப் பயிற்சியை முடித்துக்கொண்டோர்களுக்கான கலந்துரையாடல் நாளை 28ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தமிழீழ ஆய்வு நிறுவனமையப்பணியகத்தில் இடம்பெற உள்ளது.

கால்நடை வளர்ப்புப்பயிற்சி பெற்ற அனைவரும் இக்கலந்துரையாடலில் தவருதுகலந்து சொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

## புகையிலைசெய்கை பாதிப்பு

(கொழும்புத்துறை)

ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகளினுல் வேலணை, நாரந்தனை, புளியங்கூடல், சரவணை ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். நகரில் தஞ்சமடைந்துள்ள மக்கள் தமது பகுதிகளில் மேற்கொண்டுவந்த புகையிலைச் செய்கை முற்ருகப் பாதிக்கப்ட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

## விரிவுரையாளர் பற்ருக்குறை

[மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பற்ருக்குறை பெருமளவில் நிலவுகிறது.

அநேகமான விரிவுரையாளர்கள் இங்கிருந்து இடம் மாறி வேறு பல்கலைக்கழகங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்று விட்டதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போது மேற்படி பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (153]

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா இன்று காலை நடைபெறுகிறது.

கடந்த 9 தினங்களாக வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரமபாகி நடைபெற்று வருகிறது. நாளை தீர்த்தோற்சவம்நடைபெறும்.

## புதிய செயலாளர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்தின் செயலாளராக திரு. ஆ. நாகராசா இம்மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த பல வருடங்களாகச் சங்கப்பொதுமுகாமையாளரே சங்கச் செயலாளராகவும் கடமையாற்றி வந்தது குறிப்பிடத்தக்கது. (72)

## அகதிகள் பாதிப்பு

(சித்தன்கேணி)

வழக்கம்பரை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய மண்டபங்களில் தங்கியிருக்கும் காரை நகரைச் சேர்ந்த சுமார் 25 குடும்பங்கள் மலசலகூடம் இல்லாமையால் பெரும் கஷ்டப்படுகின்றனர்.

## யாருடையது?

த. விவேகானந்தன் யாழ்ப்பாணம் என்பவரால் கறுக்காய்த்தீவு செட்டி குறிச்சியில் வசிக்கும் செல்லையா சுப்புலட்சுமி (605882099V) என்பவரின் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது, உரியவர் அலுவலக நேரத்தில் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## கடனுதவி

(கொழும்புத்துறை)

சித்தன்கேணிக் கலைநகர் நேருஜி ஐக்கிய நாணய சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கத்தினரால்உபஉணவு உற்பத்தியில் ஈடுபடும் சங்க உறுப்பினர்களுக்குக் கடந்த மாதம் ஆயிரம் ரூபாவீதம் கடனுதவி வழங்கப்பட்டது.

## கஷ்ட நிவாரணம்

(கொழும்புத்துறை)

யாழ். செயலகத்தில்கடமைபுரியும் ஆட்பதிவு திணைக்கள ஊழியர்களுக்கு 1989ம் ஆண்டுக்கான கஷ்ட நிவாரண பணம் வழங்குவதற்கு அண்மையில் கொழும்பு தலைமைச் செயலகத்திலிருந்து அனுமதி கிடைத்துள்ளது. (154)

சுழிபுரம் பறாளை

# அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய

# இரதோற்சவ சிறப்பு மலர்

சோழியபுரம் என்று வரலாற்றில் இடம்பெற்ற சுழிபுரம் வடக்கு பகுதியில் நாலாபுறமும் வயல்கள் சூழ வழிபடும் அடியார்களின் வெவ்வினைகளை அறுத்து வீடு பேற்றை அளிக்கும் முருகப் பெருமானின் வருடாந்த இரதோற்சவதினம் இன்று நூல்களின் தொடக்கமே முருகன் துதியாக அமைந்துள் ளதை காணலாம். சங்க நூல் களுள் முதல் நூல் முருகன் நூல். முருகனிடத்து ஆற்றுப்




## இன்று பறாளை முருகன்

## சித்திரத்தேரின் மீது

## பவனி வருகின்றான்!

வனப்போடு அமைந்துள்ளது பக்திமணங்கமழும் திருப்பதி. அங்கு கொண்டருளி உள்ளன்போடு கும். முருக வழிபாடு மிகவும் பறாளைத் பழமையானது. பழந்தமிழ் கோவில் நூலான தொல்காப்பியத்தில் போற்றப் பெறுவது. சங்க படுத்தியே சங்க இலக்கியம் தொடங்குகிறது. தமிழ் முருகன் எல்லா உயிர்களும் நினைத்துப் பரவித் தொழத் தக்கவன். பறாளை முருகனை வழிபட்டு தங்கள் இகபர சுகங்களை பெற்றவர்கள் பலர். ஆட்டக்காவடி, பாற்காவடி,



தூக்குக்காவடி என்று பல வகைக் காவடிகளை எடுத்தும் விரதமிருந்தும் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் பக்தர்களின் இறையன்பை அளவிடமுடியாது. அழகிய திருச்குளத்தையும் பழமுதிர்ச்

மலர் அமைப்பு:

**என். எம்.**

**க ந் த சா மி,**

[பண்டத்தரிப்பு நிருபர்]

சோலையை ஒத்த விருட்ஷங்களையும் தன்னகத்தே கொண்ட பறாளைத்தலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறந்த முருகன் தலங்களில் ஒன்ருக விளங்கி வருகின்றது. பறாளை முருகனின் பாதம் பணிந்து அவன் அருள் பெறுவோம்.


பறாளை முருகன் திருவருள்
அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

**ஶ்ரீ அம்பாள் குரோசறீஸ்**

**பண்டத்தரிப்பு.**

பலசரக்கு, அன்பளிப்புப் பொருட்கள் விற்பனையில் முன்னோடிகள். நிதான விலையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

''சித்திரத் தேரில் பவனி வரும்
முருகப்பெருமானின் திருவடியைத் துதிப்போம்''

**இலட்சுமி புடவை மாளிகை**

**பண்டத்தரிப்பு.**

தரமான — நவீன ஆடைகளையும், புடவைகளையும் நிதான விலைகளில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

பார் காக்க, தேர் மீது ஆரோகணித்து
பவனிவரும் முருகா! சரணம்

**இராஜன் புடவை மாளிகை**

**பண்டத்தரிப்பு.**

கண்ணைக் கவரும் நவீன டிசைன்களில் புத்தாடைகளைப் பெற விஜயம் செய்யுங்கள்.

''பறாளை முருகனின் பேரருள் அனைவருக்கும் கிட்டுவதாக''

**யாழினி கபே**

**பண்டத்தரிப்பு,**

தித்திக்கும் சுவையான சிற்றுண்டி வகைகளுக்கு பெயர்பெற்ற ஸ்தாபனம்.

''பறாளை முருகனுக்கு எங்கள் சமர்ப்பணம்''

**பான் [PAN] கல்வி நிலையம்**

**பண்டத்தரிப்பு**

A/L 92, 93 வகுப்புகள் 29-5-91ல் ஆரம்பம்.

''பறாளை முருகா சரணம்! சரணம்!! சரணம்!!!''

**லக்கி புத்தகசாலை**

**சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு.**

பாடசாலை உபகரணங்கள், அழகு சாதனப் பொருட்கள் ஆகியன பெற்றுக் கொள்ளலாம்.

அடியார்களுக்கு அருள் பாலிக்கும்
பறாளை முருகனுக்கு எமது சமர்ப்பணம்!

**ஶ்ரீ முருகன் லோன்றி**

**பிரதான வீதி, பண்டத்தரிப்பு.**

இடரினும் தளரினும் உன் கழல்
தொழுது எழுவோம் முருகா!

**ஶ்ரீகிருஷ்ணா ரெக்ஸ்**

**பண்டத்தரிப்பு**

நவீனரக ரெடிமேட் உடுப்புகள் மற்றும் ஜவுளி விற்பனையாளர்கள்.

தேரேறிவரும் பறாளை முருகா
உன்திருவடியை போற்றுகின்றோம்.
எண்ணற்ற கரங்களில் இணையற்ற டிசைன்களில்
உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்திட
ஜவுளி உலகின் முன்னோடிகள்

**துர்க்கா ரெக்ஸ்**

**பிரதான வீதி, பண்டத்தரிப்பு.**

விரைந்து வந்து எங்களை காத்தருள
வேலவா வண்ண மயில் ஏறி வருக.

**[illegible]ாமிநாதன்**

**ஈழநாடு முகவர், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.**

பாடசாலை உபகரணங்கள், தினசரிப்பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் விற்பனையாளர்.

''பறாளை முருகன் பாதம் போற்றுவோம்.

**ரி. கே. வி. ஸ்ரோஸ்**

**மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.**

கால்நடை உணவு, கோழித்தீன் வியாபாரிகள்.

''முருகன் கைவேல்; அது எங்கள் துயர்துடைக்கும் வேல்

**டர்சினி மில்**

**காலையடி, பண்டத்தரிப்பு.**

சகாய கட்டணத்தில் நெல் குற்றியும், மிளகாய், மாவு அரைத்தும் கொடுக்கப்படும்.

''தீவினைகளை வேரறுக்கும் வேலா சரணம்''

**சின்னண்ணை சைக்கிள் வேக்ஸ்**

**சித்தன்கேணி, பண்டத்தரிப்பு.**

துன்பங்கள் நீங்க உன் அருளை நாடுகின்றோம் முருகா!
தரமான போட்டோ ஸ்ரட் பிரதிகள்,
கலர் வெள்ளை நிழற்படங்களுக்கு

**சிவாஸ் ஸ்ருடியோ,**

**பண்டத்தரிப்பு.**

''முருகா சரணம்! கந்தா சரணம்!!''

**ஶ்ரீரஞ்சன் மங்களா சைக்கிள்வேக்ஸ்**

**பண்டத்தரிப்பு.**

உதிரிப்பாக விற்பனையாளர், திருத்துபவர்.


## வழிக்குத்துணை

''விழிக்குத் துணை திருமென் மலர்ப்பாதங்கள் மெய்மைகுன்ரு
மொழிக்குத் துணை முருகா என்னும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே''

— கந்தரலங்காரம்

# பல்கலைக்கழக அனுமதிபெறும் மாணவர் தொகையை அதிகரிக்க முடிவு

(கொழும்பு)

இவ்வருடம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிபெறுபவர்களின் தொகையை நூற்றுக்குநூறு வீதம் அதிகரிப்பதற்கு உயர் கல்வி அமைச்சு முடிவுசெய்துள்ளது.

தற்போதுள்ள பல்கலைக்கழகங்களுடன் ஒன்பது பல்கலைக் கழகக் கல்வி நிறுவனங்கள் அமைக்கப்படுவதால் அதிக அளவு மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப் படவிருப்பதாக கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

## காரைநகர் மாணவர்க்கு

[யாழ்ப்பாணம்]

காரைநகர் கொத்தணிப் பாடசாலைகளில் 11ம் ஆண்டு (1990) கற்ற மாணவர்களை க. பொ. த. உயர்தரத்திற்கு வகுப்பேற்றம் செய்வதற்கான பரீட்சை இன்று 27ம் திகதியும், நாளை 28ம் திகதியும் யாழ். நாவலர் மகாவித்தியாலயத்திலும் வட்டு. இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

சகலமாணவர்களையும் தவறுது சமுகம் தருமாறு கொத்தணி அதிபர் திரு மு. திருநீலகண்டசிவம் தெரிவித்துள்ளார்.

## ஆங்கிலப்பரீட்சை

[யாழ்ப்பாணம்]

ஆங்கிலத் தொடர்புப் பரீட்சை (பொலோமி) ஜூன் மாதம் 8ம் திகதி யாழ். வேம்படி உயர்தர மகளிர் பாடசாலையில் நடைபெறும்.

பரீட்சார்த்திகள் தங்கள் அனுமதி அட்டைகளை யாழ். கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம். [152]

## இந்திய உபஜனுதிபதி மறுப்பு

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ்கட்சியின் புதிய தலைவராக உபஜனுதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா பதவி ஏற்க இருப்பதாக சில பத்திரிகைகளில் வந்த செய்தியை டாக்டர் சர்மா மறுத்திருக்கிருர்.

### ஆலி. மனித

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை

இப்பகுதிகளில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் அரச படைகளின் மனித உரிமை மீறல்' நடவடிக்கைகளின் முழு விபரங்களைச் சேகரிப்பதுடன், இலங்கையில் அமைதியை ஏற்படுத்தச் சம்பந்தப்பட்டவர்களிடையே ஓர் நல்லெண்ண முயற்சியை மேற்கொள்வதாகவும் இருந்தது (சி)

## தமிழ்நாட்டில் தீக்குளித்த ஒன்பது பேரில் ஐந்து பேர் மரணம்

(சென்னை)

தமிழ் நாட்டில் ராஜீவ் காந்தியின் மரணத்தையொட்டி தீக்குளித்த 9 பேரில் 5 பேர் இறந்துள்ளனர்.

இதே காரணத்திற்காக வேறு இரண்டுபேர் தற்கொலை செய்துகொண்டனர்.

இதேவேளையில் தமிழ் நாட்டில் வன்முறையிலீடுபட்ட இரண்டாயிரம் பேரும், முன் எச்சரிக்கை நடவடிக்கையாக ஐயாயிரம் பேருமாக மொத்தம் 7 ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (பூ]

## ராஜீவின் அஸ்தி நாளை கரைக்கப்படும்

(புதுடில்லி)

புதுடில்லி தீன் முத்தி பவனில் 32 கலசங்களில் வைக்கப்பட்டிருந்த ராஜீவ் காந்தியின் அஸ்தியை நேற்று பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று தரிசித்தனர்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை அலகபாத்துக்கு எடுத்துச்செல்லப்படும் இந்தஅஸ்தி ராஜீவ் காந்தியின் மூதாதையர் வாழ்ந்த இல்லமான 'ஆனந்தபவனில்* பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப் படும்.

நாளை மாலை கங்கை, யமுனை. சரஸ்வதி நதிகள் சங்கமமாகும் திருவேணியில் ராஜீவ் காந்தியின் அஸ்தி முழு ராணுவ மரியதையோடு கரைக்கப்படும். (பூ)

### தெற்கில்

[1ம் பக்க்த் தொடர்ச்சி]

யெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட தமது உறவினர்கள் குறித்து விசாரிப்பதற்காக சம்பந்தப்பட்டவர்கள் பொலிஸ் நிலையம் சென்றபோது யாரையும் தாங்கள் கைது செய்யவில்லையெனவும், அப்படி ஒருவர் இங்கில்லையெனவும் பொலிஸார் தெரிவித்ததுடன் வந்தவர்களை அங்கிருந்து விரட்டியதாகவும் தெரிவித்தனர்.

ஒரு சிலர் காணுமல் போனவர்கள் குறித்து விசாரிப்பதற்காக கொழும்புக்குக் கூட சென்[illegible]ங்கிருந்தும் அவர்கள் விரட்டப்பட்டதாகவும் கண்ணீருடன் தெரிவித்தனர்.

குடும்பத்தைக் காப்பாற்றி வந்தவர்கள் இவ்விதம் கைது செய்யப்பட்டுக் காணுமற் போனதால், தாங்களும் பிள்ளைகளும் நிர்க்கதியாக நிற்பதாகவும், தங்கள் குடும்பங்களைக் காப்பாற்ற உதவுமாறும் உருக்கமாகக் கேட்டுக்கொண்டனர்.

அஹிம்சையைப் போதித்த புத்தர் பெருமானின் புனித நாட்களான வெசாக் காலங்களில் பி, பி, ஸி.யின் 'சந்தேசய' வெளியிடும் தகவல் இது என இந்தப் பேட்டியின் முடிவில் பி. பி. ஸி. அறிவிப்பாளர் ஒரு போடுபோட்டார்.

## மடுவிலிருந்து அகதிகளில் சிலர் இடம்பெயர்வு

[யாழ்ப்பாணம்[

மடு அகதிகள் முகாமில் தற்போது ஏற்பட்டுள்ள இட நெருக்கடி, குடிதண்ணீர்ப் பிரச்சனை, சுகாதார வசதியின்மை போன்றவற்றினுல் அங்கிருக்கும் அகதிகளில் பலர் வேறிடங்களை நோக்கி இடம் பெயர்ந்துவருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றள.

கண்நோய், அம்மை, சின்ன முத்து, நெருப்புக்காய்ச்சல், வயிற்ருேட்டம் போன்ற தொற்றுநோய்களினுல் இரண்டாயிரத்துக்குமதிக மானேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (56)

## சகல பாடசாலைகளிலும் மாலை நேர வகுப்புகள்

[கொழும்பு]

நாடெங் முள்ள அரசாங்க பாடசாலைகளில் விரைவில் மாலைநேர வகுப்புகள் நடத்தப் படவுள்ளன.

எதிர்வரும் ஜூலை மாதம் முதல் பாடசாலைகளில் மாலை நேர வகுப்புக்கள் கட்டாயமாக்கப்படும் என்று கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினுர்.

இதற்கான சகல ஏற்பாடுகளும் கல்வி அமைச்சினுல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### இறப்பதற்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் உரையாற்றினுராம்.

பொரூநிலும், பூனமலையிலும் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றும்போதே அவர் இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றிப் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### காங்கிரஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யம் அன்றைய கூட்டத்தில் ஆராயப்படவிருப்பதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளையில் காங்கிரஸ் கட்சியின் மாநிலப்பிரிவுகளும் மற்றும் முன்னணி அமைப்புக்களும் கட்சியின் தலைமைப் பதவி குறித்து திருமதி சோனியா காந்தி எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறும் அவரைக் கேட்டுள்ளன. [பூ]

## ஜனுதிபதி வெங்கட்ராமன் பெயரும் சிபார்சு

[புதுடில்லி]

இந்திய ஜனுதிபதி திரு. வெங்கட்ராமனின் பெயரும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவிக்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது

கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் அவரது பெயரைச் சிபார்சு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

## இடைக்காலத் தலைவர் நியமனத்தில் எதிர்ப்பு

[சென்னை]

மக்களவை தேர்தல் முடியும்வரை இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு இடைக்காலத் தலைவர் எவரையும் நியமிக்கக் கூடாதெனவும், இப்படியான தலைமையக முயற்சியை கண்டிப்பதாகவும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தலைமையில் கூடிய காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது. [பூ)

## 70 லட்சம் பெறுமதியான உர வகைகள்

மொத்தம் 70 லட்சம் ரூபா பெறுமதியான உர வகைகளை கடனுக அனுராதபுரம் உரக் களஞ்சியத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று உரக் கூட்டுத்தாபனத்தின் வடமாகாணச் சந்தைப்படுத்தும் அலுவலர் ஜி,சிதம்பரநாதன் தெரிவித்தார்.

மொத்தமாக 70 லட்சம் ரூபா பெறுதியான உரவகைகளைக் கடனுக அனுராதபுர உரக்களஞ்சியத்திலிருந்துபெற்றுக் கொள்ளலாமென்று உரக் கூட்டுத்தாபனத்தின் வடமாகாண சந்தைப்படுத்தும் அலுவலர் ஜி. சிதம்பரநாதன் தெரிவித்தார். [153)

## 19 ஆயிரம் யூதர்களை இஸ்ரேல் அழைத்துக்கொண்டது

[அடிஸ்அபாபா]

எதியோப்பியாவில் இடம் பெற்றுள்ள உள்நாட்டுக் கலவரங்களை அடுத்து அங்கு வாழ்ந்த 19 ஆயிரம் யூதர்களை இஸ்ரேல் தன்நாட்டுக்கு அழைத்து வந்துள்ளது.

பல பயணிகள் விமானங்கள் மூலம் 21 மணித்தியாலத்தில் சகல தரப்பினரும் இஸ்ரேலுக்கு கொண்டு வரப்பட்டனர்.

இதேவேளை எதியோப்பியாவில் இருக்கும் மேற்கு நாட்டுப் பிரஜைகளும் நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். [பூ]

## உர வகைகள் வந்து சேர்ந்தன

[யாழ்ப்பாணம்]

வட பிராந்தியத்திற்கு 1600 மெற்றிக் தொன் உர வகைகள் வந்துள்ளன.

இலங்கை உரக்கூட்டுத்தாபன வடமாகாண சந்தைப் படுத்தும் அலுவலர் திரு. ஜி. சிதம்பரநாதன் பொறுப்பில் நெல்லியடியிலும் கரவெட்டியிலும் இவை களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளள. [153]

### 1000 கைதிகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வழங்கப்பட்டிருக்கிறது.

நீதியமைச்சர் ஜனுப் ஏ. சி. எஸ். ஹமீத் ஜனுதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு செய்த சிபார்சை அடுத்தே இந்த ஆயிரம் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கபபட்டது.

### யாழ்- மருத்துவபீட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பரீட்சைக்கு கொழும்பில் தோற்ற விரும்பும் மாணவர்கள் 1991 - ஜூன் மாதம் 3-ம் திகதி மு. ப. 8-30 மணிக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

### கட்டுவனில்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலினுல் ஏற்பட்ட சேத விபரம் பற்றி தெரியவரவில்லை. [பூ]

### காங்கிரஸ்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாறு கேட்டுக்கொண்ட போது திருமதி சோனியா காந்தி அந்தப் பதவியை ஏற்றுக் கொள்ள கண்டிப்பாக மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### 30 நாளில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாசாவிடமும், சபாநாயகரிடமும் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக மக்கள் ஐக்கிய முன்னணி கட்சித் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

## பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு

[சென்னை]

திரு. ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட குண்டு வெடிப்பின் போது உயிரிழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிதியுதவி வழங்குவதற்கென 5 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் திரு. சந்திரசேகர், பிரதம மந்திரி நிதியிலிருந்து இவ்வுதவித் தொகையை வழங்கியுள்ளார்.

இதேவேளை தமிழ்நாடு ஆளுநர், உயிரிழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் பத்தாயிரம் ரூபா வழங்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். [பூ]

நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றேட் — கோண்டாவில்

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

5ம் ஆண்டு மாணவர்களுக்கான மேற்படி பரீட்சை 01 06-91 சனி மு ப. 11-00க்கு நடைபெறவுள்ளது. தங்கள் பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும். இப்பரீட்சை மாதமிருமுறை தொடர்ந்து நடாத்தப்படும்.

கணிதம்: திரு. நயினை S. S. பிள்ளை

தமிழ்: திரு. சுந்தரலிங்கம்

விபரங்களுக்கு: நிர்வாகி

(எ-1335)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81